# அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

கணக்கெடுப்பாக நீதிமன்றங்களோ இன்னபிற ஒன்றிய அரசு அமைப்புகளோ அங்கீகரிக்கும், மாறாக மாநில அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் போது அது வெறுமனே கணக்கெடுப்பாக இருக்குமே தவிர அதனால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. சமீபத்தில் பீகாரில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு அடிப்படையில் கொடுக்கபட்ட இட ஒதுக்கீட்டினை, நீதிமன்றம் நிராகரித்துவிட்டதை எல்லாம் வசதியாக மறந்துவிட்டு அன்புமணி ராமதாஸ் அவர்கள் பேசி வருகிறார்.

1989 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவினை ஏற்படுத்தி, 115 மிகவும் பின்தங்கிய சமூக மக்கள் கல்வி வேலைவாய்ப்பில் முன்னேறி வாழ்வில் ஏற்றம் பெற காரணமாக இருந்தார். கலைஞர் அவர்கள் அவசரகதியில் அரசியலுக்காக எதுவும் செய்யாமல் ஆழ்ந்து ஆலோசித்து உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட மீது அக்கறை கொண்டு எந்த நீதிமன்றமும் நிராகரித்துவிடாதபடி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டினை செயல்படுத்திக் காட்டினார்.

**மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக திட்டங்களை முன்னெடுக்கும் முதல்வர்!**

தலைவர் கலைஞர் வழியில் பயணிக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற உடனே கடந்த 1987 அதிமுக ஆட்சியில் இட ஒதுக்கீடு கேட்டு போராடியதற்காக சுட்டுக்கொல்லப் பட்ட இட ஒதுக்கீடு போராளிகள் 21 பேருக்கு விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படியே மணிமண்டபம் அமைக்கபட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது. அதேபோல மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பெறும் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

அன்புமணிக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன் ஏற்கனவே உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு மூலம் கடந்த பத்து ஆண்டுகளாக மருத்துவம் உள்ளிட்ட மேற்படிப்பிற்கு செல்லும் வன்னிய சமூக மாணவர்களின் எண்ணிக்கை 10.5% விட அதிகம். தற்போது 10.5% யை அமல்படுத்துவதன் மூலம் மேற்படிப்பில் சேரும் வன்னியர் சமூக மாணவர்கள் எண்ணிக்கையில் பின்னடைவை சந்திக்கவே வாய்ப்புகள் அதிகம். ஆனால், அதைப்பற்றி எல்லாம் அவர்களுக்கு கவலை இல்லை. அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காகவே செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவுசெய்யும் அரசல்ல இந்த திராவிட மாடல் அரசு. எதைச் செய்தாலும் அதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணமும், அது யாராலும் நிராகரிக்க முடியாத வண்ணமும் அமைய வேண்டும் என்ற வகையில் கலைஞர் காட்டிய வழியில் சரியான முடிவுகளை எடுத்து செயல்படுத்தி வரும் அரசாகவே இருக்கிறது.

**இளைஞர்களுக்கு சாதிவெறியை பாய்ச்சி வரும் டாக்டர் ராமதாஸ்!**

ஆனால் தற்போது பா.ம.க.வோ தங்கள் அரசியல் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மிகவும் பிற்படுத்தபட்ட மக்களுக்கு துரோகத்தை மட்டுமே செய்து வருகிறது. நன்றாய் படித்து வேலைக்கு சென்று வாழ்வில் சிறந்த நிலையை அடையக்கூடிய வாய்ப்புள்ள இளைஞர்களை எல்லாம், பிஞ்சிலேயே சாதி வெறி பாய்ச்சி நன்றாய் செழித்து வளர வேண்டிய அந்த இளைஞர்களை வெறும் களைகளாய் மாற்றிக் கொண்டிருப்பதுதான் பா.ம.க.வின் சாதனை. மருத்துவராகவும், பொறியாளராகவும், மாவட்ட ஆட்சியராகவும் இன்னபிற அரசின் உயர் பதவிகளில் இடம் பெற வேண்டிய இளைஞர்களை உங்கள் அரசியல் நலனுக்காக தவறான வழியிலே வழிநடத்தி வரும் தங்களை இனியும் இச்சமூகத்து இளைஞர்கள் நம்பப்போவதில்லை.

அன்புமணி ராமதாசுக்கு உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்கள் மீது அக்கறை இருக்குமானால் அவர் கை குலுக்கி உறவாடி கூட்டணியில் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை பணியவைத்து, சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த சொல்லுங்கள். ஆனால், அதற்கு தைரியம் வேண்டும். தைலாபுரம் பயிலரங்கத்தில் சொல்லி தர மாட்டார்களா? மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும் என மோடி அரசை கேட்பீர்களா? அதை எல்லாம் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்!

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

---

நெல்லை கிழக்கு, மத்திய மாவட்டங்கள் மற்றும் மாநகர

# கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



**நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட மற்றும் நெல்லை மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 28.12.2024 அன்று காலை 10 மணியளவில் நெல்லை வர்த்தக மையத்தில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன் ஆகியோர் தலைமையில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடை பெறுகிறது.**

**அதுசமயம் மாவட்ட, மாநகரக் கழகங்களின் நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**பொருள்:**

**1.அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா – முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை.**

**2.கழக ஆக்கப் பணிகள்.**

**அமைச்சர் கே.என். நேரு**
**முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**

---

கழக முன்னாள் மாநில தொண்டரணி செயலாளர்

# சிந்தை மு.ராஜேந்திரன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, டிச. 26-

கழக முன்னாள் மாநில தொண்டரணிச் செயலாளரும் கழக முன்னோடியுமான சிந்தை மு.ராஜேந்திரன் அவர்களின் மறைவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழக முன்னாள் மாநில தொண்டர் அணி - செயலாளர் - மத்தூர் கலைமகள் கல்வி நிலைய தாளாளர் - முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் - கழக மூத்த முன்னோடி முனைவர். சிந்தை. மு.ராஜேந்திரன் அவர்கள் நேற்று (25.12.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிந்தை மு.ராஜேந்திரன் மறைவுக்கு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**கழக மாநில தொண்டர் அணி முன்னாள் செயலாளர் முனைவர் சிந்தை மு.ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் தி.மு.கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர். தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் இயக்குநராகப் பணியாற்றியவர். தருமபுரி மாவட்டம், மத்தூரில் கலைமகள் கல்வி நிலையத்தைத் துவக்கி, அப்பகுதி மக்கள் கல்வியில் மேம்பட பாடுபட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாட்களில் தொண்டரணிச் சீருடையில் உடன் வந்தவர்.**

**அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும், தருமபுரி மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளை வழங்கும் - “கவிக்கோ விருது!”

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெறுகின்றார்!

*வேலூர், டிச. 26 -*

*தமிழ்க் கவிதை இலக்கிய வரலாற்றில், தனக்கென ஓர் இடம்பெற்றுத் தகத்தகாயமான புகழுடன் ஒளிவீசித் திகழ்பவர், நினைவில் வாழும் பெருங் கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறியும்.*

*“முத்தமிழ் அறிஞர்” தலைவர் கலைஞர் அவர்களுக்கும் கவிக்கோ அவர்களுக்குமான தமிழ்சார்ந்த நட்புறவு இணையில்லாத அன்பின்பாற்பட்டதாகும்.*

*“ வெகுமானம் எது வேண்டும்?*

*என்று என்னைக் கேட்டால், எனக்கு ரகுமானே போதும்!” என மகிழ்ந்தவர் தலைவர் கலைஞர்.*

*கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கு 19.7.1998 அன்று சென்னை இராஜாஜி அரங்கில் “முத்தமிழ் அறிஞர்” தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த மணிவிழாவின்போது அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத் தொகையிலிருந்து,*

*22.1.1999 அன்று “கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளை” நிறுவப்பட்டு, 2014 ஆம் ஆண்டுவரை, ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிஞருக்கு விருதுடன், ரூ. 30,000 பொற்கிழியும் வழங்கப்பட்டு வந்தது.*

*26.10. 2015 மற்றும் 27.10.2015 இல், சென்னைக் காமராசர் அரங்கில் நடைபெற்ற “ கவிக்கோ பவளவிழா “ வில், அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத்தொகை, கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளையில் சேர்க்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் கவிஞருக்கு ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழியும், விருதும் வழங்கப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டு,*

**2023 ஆம் ஆண்டுக்கான “கவிக்கோ விருது”**

*கழக இலக்கிய அணியின் மாநிலத் துணைத் தலைவரும், மேனாள் சட்டப் பேரவை உறுப்பினரும், தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர், கவிக்கோ அப்துல் ரகுமான் .ஆகியோரின் பேரன்பைப் பெற்றவரும்,*

*தமிழ்நாடு முதலமைச்சர், நல்லாட்சி நாயகர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உயரிய அன்பிற்கு உரியவருமான நாடறிந்த நற்றமிழ்க் கவிஞர், கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு இன்று ( 26.12.2024 - வியாழக் கிழமை) மாலை 6 மணிக்கு வேலூரில் நிகழும் மிகச் சிறப்பான விழாவில் வழங்கப்படுகின்றது.*

*முதன் முதலாக*
*2000 வது ஆண்டில்,*
*“ கவிக்கோ விருது “*

*முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு வழங்கிப் பெருமை பெற்றது, கவிக்கோ அறக்கட்டளை என்பது குறிப்பிடத்தக்கது.*

*வேலூர் சத்துவாச்சாரி, சோலை அரங்கில் நடைபெறும், “கவிக்கோ விருது விழா”வில், கவிக்கோ அறக்கட்டளை பொருளாளர் திரு.வெ.சோலைநாதன் தலைமையேற்க, கவிக்கோ அறக்கட்டளை உறுப்பினர், பதிப்புத் திலகம் திரு.எஸ்.எஸ்.ஷாஜகான் வரவேற்புரையாற்ற,*

*கவிக்கோ அறக்கட்டளை துணைத்தலைவர், பேராசிரியர், “கவியருவி” தி.மு. அப்துல்காதர் அவர்கள் பாராட்டுரை நிகழ்த்த, தமிழியக்கம் மாநில அமைப்புச் செயலாளர் பேராசிரியர், முனைவர் கு. வணங்காமுடி அவர்களும், தமிழியக்கம் மாநிலச் செயலாளர், சொற்கோமு.சுகுமார் அவர்களும் வாழ்த்துரை வழங்க, “கவிதை உறவு” மாத இதழ் ஆசிரியர், கவிஞர் ஏர்வாடி இராதாகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரை முழங்க,*

*கவிக்கோ அறக்கட்டளையின் செயலாளர் அ. அயாஸ் பாஷா அவர்கள் தகுதியுரை படித்தளிக்க,*

*பெருமைக்குரிய அருமைக் கவிஞர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு,*

*கவிக்கோ விருது, பட்டயம், பொற்கிழி வழங்கி,*

*தமிழியக்கம் அமைப்பின் நிறுவுநர் மற்றும் தலைவரான கல்விக்கோ, வி.ஐ.டி. வேந்தர், முனைவர் கோ.விசுவநாதன் அவர்கள் நிறைவுப் பேருரை ஆற்றுகின்றார்.*

*“கவிக்கோ விருது” பெறும் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகின்றார்.*

*கவிக்கோ அறக்கட்டளையின் உறுப்பினர் டாக்டர் அ.அஜீம் எம்.பி.பி.எஸ்.எம்.டி.அவர்கள் நன்றியுரையாற்ற, பேராசிரியர் கவிஞர் வேலூர் அன்பு, செஞ்சி அ.முகமது அஷ்ரஃப் ஆகியோர் நிகழ்ச்சியாளர்களாகச் செயலாற்றுகின்றனர்.*

*தமிழ் உள்ளங்கொண்ட அனைவரையும், கவிக்கோ விருது வழங்கும் விழா விற்கு வருக! வென அழைத்து மகிழ்கின்றது கவிக்கோ அறக்கட்டளையும், வேலூர் தமிழியக்கமும்.*

---

தலைவர் கலைஞர் திறந்துவைத்த அதே தினத்தில்

# திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்!

## முதல்வர் காணொலி மூலம் திறந்துவைத்தார்!

*திருவாரூர்,டிச. 26 -*

*மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்று திறந்த திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம், புதிதாக கட்டப்பட்டு, அதே திருநாளில் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களால் காணொளிக் காட்சி வழியாக திறந்து வைக்கப்பட்டது மக்களுக்கு மகிழ்வைத் தந்துள்ளது.*

*தமிழ்நாடு முதல்வர் , திராவிட நாயகர் சாதனை திட்டங்களின் தொடர்ச்சியாக, திருவாரூர் மாவட்டத்தில் மக்கள் பயனுற புதிதாக கட்டிடங்கள் கட்டப்பட்ட திருவாரூர், கோட்டூர், முத்துப்பேட்டை, நீடாமங்கலம் ஒன்றியங்களின் அரசு அலுவலகங்கள் காணொளி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் கரங்களால் திறப்புவிழா கண்டது.*

*இந்த திறப்புவிழாவின் சிறப்பாக திருவாரூர் ஊராட்சிய ஒன்றிய அலுவலக கட்டிடம் 1967ஆம் ஆண்டு டிசம்பர் 23ம் நாள் அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் , அதே தினத்தில் தற்போது திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் புதிய கட்டிடமாக திறந்து வைக்கப்பட்டிருப்பது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்த க்கது. தற்போது புலிவலம் ஏ.தேவா ஒன்றியக் குழு தலைவராக உள்ளார்.*

*முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவை தொடர்ந்து, ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற கண்கவர் கிராமிய கலைநிகழ்சிகள் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அலுவலகங்களில் இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், ஒன்றிய குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, வாரை.எஸ்.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ஆகியோர் துவக்கி வைத்தனர்.*

*மேலும் இந்த திறப்பு விழா நிகழ்வுகளில் கோட்டூரில் தமிழ் நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்.விஜயன், சட்ட மன்ற உறுப்பினர் கே. மாரிமுத்து, நீடா மங்கலத்தில் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன், முத்து ப்பேட்டையில் மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா.மனோகரன் , நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், ஆர்.ராஜசேகரன், நகர்மன்ற தலைவர் ஆர்.ராமராஜ், புவனப்ரியா செந்தில்,துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர் மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.*

---

சித்தேரி மலைப்பாதையில் ஏற்பட்ட மண் சரிவு -

# 63 கிராம மக்கள் பாதிப்பு - துரித நடவடிக்கையால் மீண்டும் போக்குவரத்து துவங்கியது!

## தருமபுரி எம்.பி.ஆ.மணி நடவடிக்கை!

*தர்மபுரி, டிச. 26 -*

*தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த சித்தேரி மலைப்பகுதியில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு பெய்த தீவிர மழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டு மலைக்கிராமத்திற்கான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டி ருந்தது. இதனால் சித்தேரி மலை பகுதிக்கு உட்பட்ட சூரிய கடை, சித்தேரி, மண்ணூர், அழகூர், தோல் தூக்கி உள்ளிட்ட 63 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எந்த கனரக வாகனங்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.*

*இதனால் பொதுமக்கள் விவசாயிகள் என போக்குவரத்தை நம்பியுள்ள அனைத்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது.பள்ளி மாணவர்கள் கர்ப்பிணி பெண்கள் முதிய வர்கள் என அனைவரும் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளான நிலையில்,*

*இது குறித்து தகவல் அறிந்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் ஆலோசனையின்படி நெடுஞ்சாலை துறை மற்றும் மாவட்ட நிர்வா கத்தினை அணுகி மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சீரமைக்கும் பணிகளை துரிதப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.*

*இதனை தொடர்ந்து சீரமைக்கப் பட்ட பாதையில், மீண்டும் போக்குவரத்தினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப் பினர் வழக்கறிஞர். ஆ.மணி மற்றும் முன்னாள் அமைச்சர் கழக மேற்கு மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன் ஆகியோர் நேரில் சென்று துவக்கி வைத்தனர்.*

*மீண்டும் அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்படாமல் இருக்க நெடுஞ்சாலைத் துறை ஆய்வு செய்து, ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி சரிவு ஏற்பட்ட பகுதியில் திடமான சுவர் அமைத்து சாலை அமைக்க அறிவுறுத்தி உள்ளதால் இதற்கான நிதியை விரைந்து ஒதுக்கீடு செய்து இனி நிரந்தரமாக மக்கள் பாதுகாப்பாக செல்வதற்கான வழிவகை செய்ய உள்ளதாக தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி தெரிவித்தார். நிகழ்வின் போது மாவட்ட துணை செயலாளர் பொறியாளர் சி.கிருஷ்ணகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துக் குமார், பி.எஸ்.சரவணன், சந்திரமோகன்,நெடுஞ்சாலைதுறை நாகராஜ்,வனத்துறையினர் உடனிருந்தனர்.*

---

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவியின்

# பாலியல் புகார் மீது உடனடி நடவடிக்கை!

## பதிவாளர் அறிக்கை!

*சென்னை, டிச.26-*

*சென்னை அண்ணா பல்கலைக்கழக, கிண்டி பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவி ஒருவர், ராஜா அண்ணாமலைபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.*

*மேற்படி புகாரில், மாணவி தனது ஆண் நண்பருடன் கல்லூரி வளாகத்தின் பின்புறம் பேசிக்கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் இருவரையும் அச்சுறுத்தியதாகவும் பின்னர் அதே நபர்கள் தன்னுடைய நண்பரை தாக்கிவிட்டு தன்னை பாலியல் சீண்டலுக்கு முயன்றதாக மாணவி காவல் நிலையத்தில் 24.12.2024 அன்று புகார் தெரிவித்துள்ளார்.*

*இந்த புகாரின் பேரில் காவல்துறையினர் உரிய வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றார்கள். கோட்டூர்புரம் காவல் நிலைய உதவி ஆணையர் தலைமையில், ஆர்.ஏ.புரம் மகளிர் காவல் நிலையக் குழுவினருடன் வழக்கை தீவிர விசாரணை செய்து வருகின்றனர். இது தொடர்பாக அண்ணா பல்கலைக் கழக உள் புகார்க் குழுவினருக்கும் தற்போது தகவல் தெரிவிக்கப்பட்டு, குழுவின் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.*

*காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று உயர்கல்வித்துறை உயர் அலுவலர்கள் அண்ணா பல்கலைக்கழக பதிவாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகம் காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது.*

*பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு பணியாளர்கள் எப்போதும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த விரும்பத்தகாத சம்பவம் நடந்துள்ளது. இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழாமல் இருக்க பல்கலைக்கழக அளவில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*அண்ணா பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரை அனைத்து மாணவர்களின் பாதுகாப்பு எப்போதுமே முதன்மையான முன்னுரிமையாக உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைது செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல் துறை அலுவலர்கள் உறுதியளித்துள்ளனர்.*

*இவ்வாறு சென்னை அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். பிரகாஷ் தெரிவித்துள்ளார்.*

---



சென்னை சர்வதேச விமான நிலையத்தில் 24.12.2024 அன்று தமிழ்நாடு அரசின் ஏற்பாட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் ஜப்பான்,KYOTO பல்கலைக்கழகத்தில், சர்வதேச இன்டர்ன்ஷிப் திட்டத்தில் (International Internship Program) பங்கேற்ற மாணவியர்கள் தமிழ்நாடு வருகை புரிந்தனர்.